12.03.2024

OS.No.88/2020

PW2 -சங்கரேஸ்வரன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 12.03.2024.

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.43 ஆவணத்தில் கண்டுள்ள நாராயணன் பிறவியிலேயே கண்பார்வை அற்றவர் மற்றும் பேச இயலாதவர் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.43 ஆவணம் எழுதப்பட்ட விவரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். நீங்கள் மேற்படி நாராயணனை பார்த்தீர்களா என்றால் ஆமாம். நீங்கள் பாக்கும்போது நாராயணன் கண்பார்வை அற்றவராகவும், பேசமுடியதாவராகவும் இருந்தார் என்றால் சரியல்ல. சார்பதிவாளர் அலுவகம் முன்பு அவர் கையொப்பம் செய்தார்.

2. மேற்படி நாராயணன் கண்பார்வையுடம் பேசும் திறனுடம் சார்பதிவாளர் அலுவகத்திற்கு வந்து கையொப்பம் செய்தார் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நாராயணன் பிறவியிலேயே கண்பார்வை அற்றவராகவும், வாய்பேச முடியதாகவராகவும் இருந்தபோதிலும் புத்திசுவாதீனம் இல்லாத ஒரு பெண்ணை திருமணம் செய்து வைத்தார்கள் என்றும், இந்த பெண் 10 ஆண்டுகளாக வீட்டில் அடைத்து வைத்திருந்தார்கள் என்றும் இலத்தூர் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார்மனுவின் அடிப்படையில் குற்ற எண்.46/2016 ல் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது

3. மாவட்ட ஆட்சித்தலைவர் மேற்படி பெண்ணை மீட்டு காப்பகத்தில் தங்கவைத்தார் என்றால் எனக்கு தெரியாது. அதுசம்பந்தமாக வழக்கானது செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CRLMP No.1824/2016 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்த பெண்ணிற்கு மேற்படி நாராயணின் தாயார் ஜீவனாம்சம் கொடுக்கவேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

4. நாராயணன் தன்னை தானே பராமரிக்க முடியாத நபராக இருக்கும்போது அவர் தனக்காகவும், தனது தாயாருக்காகவும் வா.சா.ஆ.43 பொதுஅதிகார ஆவணத்தை எழுதிக்கொடுத்தார் என்பது நம்பகத்தன்மை அற்றது என்றாலும், இந்த ஆவணம்

உண்மையான ஆவணம் அல்ல என்றாலும் சரியல்ல. பிராதுதபசில் சொத்து என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின்படி ஆதியில் A.R.S.ராமலிங்கம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். (**சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்ட செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரின் உண்மை நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

5. பிராதுதபசில் சொத்து ஜமீன் ஆளுகைக்கு உட்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ஜமீன் ஒழிப்பிற்கு பிறகு A.R.S.ராமலிங்கம் பெயரில் பி.வா.சா.ஆ.4 பட்டா வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீங்கள் வாதியின் அறக்கட்டளை சார்பாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரிதான். இந்த அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம்.

6. பிராதுதபசில் சொத்து மேற்படி அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்டதா என்றால் வழக்கு நிலுவையில் இருப்பதால் என்னால் சொல்ல இயலாது. வா.சா.ஆ.43 ன்படி வாதி அறக்கட்டளைக்கு தபசில் சொத்தை கிரையம் வாங்குவதற்காக பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த ஆவணம் பிறப்பிக்கப்பட்டது என்றாலும், அந்த ஆவணத்தை பதிவு செய்ய வலியுறுத்தி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

7. அனுபவத்தோடு மேற்கண்ட கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டதா என்றால் 5 செண்ட் அனுபவத்தோடும், 8 செண்ட் அனுபவமில்லாமலும் மேற்கண்ட கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டது. மேற்கண்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தை அடிப்படையாக கொண்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணத்தை பதிவு செய்யமுயன்றபோது ஏற்கனவே முன்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின்படி கிரைய ஒப்ந்த ஆவணத்தை பதிவு செய்யமுடியாது என சார்பதிவாளர் தெரிவித்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணமானது நாளதுதேதிவரை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், பதிவு செய்யப்படாத ஆவணத்தை அடிப்பயைடாக கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

9. பிராதுதபசில் சொத்து முழுவதும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

**10. மறுவிசாரணை இல்லை.**

ஒம்/-கே.பாஸ்கர்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி